**O.S.No.49/2023**

**PW.1** சரஸ்வதி

01-04-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை</u>

வாதியின் பெயர் விக்னேஷ்தான் விக்னேஷ்குமார் அல்ல என்று சொன்னால், எனக்கு அதைப் பற்றித் தெரியாது. வாதி தனபாலின் மகன் என்று சொன்னால் சரிதான். தனபாலின் தகப்பனார் பெயர் துரைசாமி. தனபாலின் தாயார் பெயர் பழனியம்மாள். தனபாலின் பெற்றோர்கள் நெ.5, வ.உ.சி நகர், ராமநாதபுரம், கோயமுத்தூர் என்ற முகவரியில் வசித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். துரைசாமி 2016 ல் காலமானார். பழனியம்மாள் 2009 ல் காலமானார். தனபாலுக்கு ருக்மணி என்பவருடன் கடந்த 06-06-1988 ல் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால், எனது கணவர் வீட்டில் சொல்லித் தெரியும். அவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்று சொன்னால், சரிதான். தனபாலுக்கும், ருக்மணிக்கும் பிறந்த மகன்தான் அசல் வழக்கின் வாதி விக்னேஷ் என்று சொன்னால் சரிதான். தனபாலும், ருக்மணியும் சுமார் 7 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், 7 ஆண்டுகள் அவர்கள் ஒன்றாகத்தான் வாழ்ந்தார்கள் என்றும், நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 7 ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனபால் விவாகரத்து கேட்டு எச்.எம்.ஓ.பி.நெ.205/1994 என்ற மனுவை கோயமுத்தூரில் உள்ள குடும்பநல நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான்.

ருக்மணி ஜீவனாம்சம் கேட்டு மனு தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். ஆரம்பத்தில் எம்.சி.11/1999 மனுவில் ஜீவனாம்சம் கொடுக்குமாறு உத்திரவாகியிருந்தது பற்றி எனக்குத் தெரியாது. அந்த உத்திரவில் ருக்மணிக்கு மாதம் ரூ.400/-மும், இந்த வழக்கின் வாதிக்கு ரூ.200/-மும் மாத ஜீவனாம்சமாக உத்திரவானது என்று சொன்னால், தனபால் அதைப் பற்றி என்னிடம் கூறியுள்ளார். பின்னர் மீண்டும் எம்.சி.109/2002 என்ற மனுவை ருக்மணி தாக்கல் செய்து, தனக்கும் தனது மகனுக்கும் அதிக ஜீவனாம்சம் வேண்டுமென்று மனு தாக்கல் செய்த விவரம் எனக்குத் தெரியும். அந்த மனுவில் ருக்மணிக்கு அவரது ஆயுட்காலம் வரை அல்லது மறு உத்திரவு வரும்வரை மாதம் ரூ.1000/- வீதம் தரவேண்டும் என்றும், அந்த மனுவில் இரண்டாம் மனுதாரரை (இந்த வழக்கின் வாதி) பொறுத்து அவர் வயது வந்தவராக ஆகும் காலம் அல்லது மறு உத்திரவு வரும்வரை மாதம் ரூ.1000/- வழங்கவேண்டும் என்று உத்திரவான விவரம் எனக்குத் தெரியும். தனபால் இறக்கும்வரை ருக்மணிக்கு ஜீவனாம்சம் கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரிதான். எனக்கும், தனபாலுக்கும் திருமணம் நடந்தது என்று காட்டுவதற்கு ஆதாரமாக நான் ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கும், தனபாலுக்கும் உண்மையில் திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அவ்வாறு நடைபெற்றிருந்தால் அதற்கு ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

தனபால் வருவாய் துறையில் முதலில் தட்டச்சராக வேலை பார்த்து வந்தார் என்று சொன்னால், சரிதான். 1988 ல் ருக்மணியுடன் திருமணம் ஆன சமயத்தில் தனபால் வால்பாறையில் வருவாய்த்துறையில் எழுத்தராக பணியில் இருந்தார் என்று

சொன்னால் சரியல்ல. அவர் தட்டச்சராகத்தான் இருந்தார். பின்னர் 1990 ல் மாறுதலாகி கோயமுத்தூரில் உள்ள ஆட்சியர் அலுவலகத்திற்கு பணிக்கு வந்தார் என்று சொன்னால், அதைப் பற்றி எனக்கு நினைவில்லை. பின்னர் 2001 ல் பதவி உயர்வு பெற்று கோயமுத்தூர் ஆட்சியருக்கு நேர்முக உதவியாளராக (PA) பணி செய்து வந்தார் என்று சொன்னால், அவர் (PC) (Personal Clerk ) ஆக இருந்தார். பின்னர் பதவி உயர்வு பெற்று வருவாய் ஆய்வாளராக பணி செய்தார் என்று சொன்னால், எனக்கு அதைப் பற்றித் தெரியாது. பின்னர் அவர் வட்டாட்சியராக பதவி உயர்வு பெற்றார் என்று சொன்னால், துணை வட்டாட்சியராக பதவி உயர்வு பெற்றார். பணியிலிருந்து ஓய்வு பெறும்போது வட்டாட்சியராக பணிபுரிந்தார் என்று சொன்னால் சரிதான். அவருக்கு இளம் வயதிலிருந்து அவர் வகித்த பதவிகளின் அடிப்படையில் அவருக்கு சீரான வருமானம் வந்தது என்று சொன்னால் சரிதான். அவர் தனது வருமானத்தை குடும்பத்திற்கு செலவிட்டதுபோக வங்கியில் சேமித்து வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான்கூறுவது தவறு என்றும், செலவு போக மீதித் தொகைகளை அவர் வங்கியில் சேமித்துத்தான் வைத்திருந்தார் என்றும், நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தனபாலுக்கு எஸ்.பி.ஐ வங்கி, ரேஸ்கோர்ஸ் கிளையில் வங்கி கணக்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். வங்கி சேமிப்பு கணக்கு எண்ணானது 10027112892 என்று சொன்னால், எனக்கு சரியாக நினைவில்லை. அந்த கணக்கில் அவர் இறக்கும்போது ரூ.16,95,695/- ரூபாய் இருந்தது என்று சொன்னால் சரிதான். அதேபோல் தனபாலுக்கு திருச்சி ரோட்டில் உள்ள கனரா வங்கிக் கிளையில் ஒரு சேமிப்பு கணக்கு இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த வங்கி சேமிப்பு கணக்கு எண்.1248101006888 என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு சரியாக

நினைவில்லை. இந்த வங்கி கணக்கில் அவர் இறக்கும்பொழுது ரூ.54,000/- இருந்தது என்று சொன்னால், எனக்கு அதைப் பற்றி நினைவில்லை. கனரா வங்கிக் கணக்கில் ரூ.54,000/- இருந்த விவரம் எனக்குத் தெரியும் என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தனபால் உயிரோடு இருக்கும் பொழுது 2 ஆம் பிரதிவாதி நிறுவனத்திடம் இரண்டு மனைகளுக்காக பணம் கட்டியுள்ள விவரம் எனக்குத் தெரியும். 5 ஆம் பிரதிவாதி கோட்டக் மகேந்திரா வங்கியில் தனபால் நிரந்தர வைப்பீடு ரூ.4,75,000/-க்கு வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. 5 ஆம் பிரதிவாதி வங்கியில் வைத்திருந்த நிரந்தர வைப்பீட்டுக் கணக்கைப் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோன்று 6 ஆம் பிரதிவாதி வங்கியில் தனபால் ஒரு நிரந்தர வைப்பீடு வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. 6 ஆம் பிரதிவாதி வங்கியில் வைத்திருந்த நிரந்தர வைப்பீட்டுக் கணக்கைப் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரிந்தும் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 25-02-2011 ஆம் தேதி அன்று பொள்ளாச்சி வட்டம், பனப்பெட்டி கிராமம், அபினயா அவின்யூவில் என்ற மனை பிரிவு இடத்தில் மனை எண்.212 ஐ கிரையம் பெற்றிருந்தார் என்று சொன்னால், அந்த மனை எண் எனது பெயரிலும், அவருடைய பெயரிலும் வாங்கப்பட்டது. அந்த மனையிடத்தை தனபால் முழுத்தொகையும் கொடுத்து பெயர் அளவிற்கு எனது பெயரைச் சேர்த்து கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 24-09-2014 ஆம் தேதி கோயமுத்தூர் மாவட்டம், இடிகரை கிராமம், இ.பி. காலனியில் 1 ஏ என்ற

மனையிடப் பிரிவில் மனை எண் 4 னை கிரையம் பெற்றிருந்தார் என்று சொன்னால் சரிதான். ஆனால், அதில் நானும் பணம் கொடுத்துள்ளேன். தனபால் மட்டும்தான் இடிகரை கிராமத்தில் மனை வாங்கினார் என்றும், அதற்கு நான் எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த மனையிடத்தை வாங்குவதற்கு நானும் தொகை கொடுத்தேன் என்பதைக் காட்டுவதற்கு நான் ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தனபால் அவர்கள் கடனில் ஷிப்ட் டிசையர் கார் ஒன்றை வாங்கினார் என்று சொன்னால் சரிதான். அந்த காரின் பதிவு எண் டி.என்.66-டபிள்யூ 9972 என்று சொன்னால் அதன் பதிவு எண்.9772 ஆகும்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டலின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஓம்/சரஸ்வதி,

Taken down by me/ typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.